மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அப்படியொரு யோசனை இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது அது இடைக்காலத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து வழங்க இன்றைய நமது அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தமிழ் மொழிக்கு ஆதரவாக நடத்திய போராட்டங்களில் பங்கு கொண்ட நண்பர்களுக்கு உதவித் தொகை அளிப்பது குறித்து முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்கள்.

*வினா 451 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் இது வரை பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுள் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இதுவரை 9,701 உடல் ஊனமுற்றவர்கள் சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(ஆ) 2,650 உடல் ஊனமுற்றோர்களை சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகம் 31-10-77 வரை வேலையில் அமர்த்தியுள்ளது.

1978 மார்ச் 8]

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோருக்காக வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களுக்காக எந்தெந்தப் பணிகளை வைத்திருக்கிறார்கள்? அவர்களை என்னென்ன பணிகளில் வைக்கிறார்கள்? கையில்லாதவர்களுக்கு என்ன பணி கொடுக்கப்படுகிறது? கால் இல்லாதவர்களுக்கு என்ன பணி கொடுக்கப்படுகிறது? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கண் இல்லாதவர்கள் 189 பேர், காது கேளாதவர்கள் 348 பேர், வேறு வகையாக உடல் ஊனமுற்றவர்கள் 2,113 பேர்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் ஒரு சில அதிகாரிகள் அதற்கு மாறாக நடந்து கொள்கிற சூழ்நிலை இருப்பதால், அந்த அதிகாரிகள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது பற்றி அரசின் கவனத்திற்குத் தகவல் வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களை வேலையிலே அமர்த்துவதற்கு இப்பொழுதிருக்கிற விதிமுறைகள் காரணமாக, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வழியில்லாமலிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலை தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்ற அனைவருக்கும் அதிகக் காலதாமதமின்றி வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வேலை என்கின்ற நிலையில், உடல் ஊனமுற்றவர்களும் உடல் ஊனமுறாதவர்களும் எல்லோருமே ஒரே நிலையில் தானிருக்கிறார்கள் ஒரே நிலையில் தான் பாவிக்கப்படுகிறார்கள். ஆனால், உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியாத நிலைமையில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைத் தளர்த்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, அரசாங்க வேலைகளிலே நியமிப்பதற்கு 'டெபார்மிட்டி' என்பதை வைத்து, அவர்களை 'ரிஜக்ஷன்' செய்கிறார்கள். அந்த விதி தளர்த்தப்படுமா? தளர்த்தப்பட்டு, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 8

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது குறித்து அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. அ. க. அரங்கநாதன் : தலைவரவர்களே, உடல் ஊன முற்றோருக்கு அங்கே என்னென்ன வேலையைக் கற்றுத் தருகிறார்கள். கற்றுக் கொள்பவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—குருடர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—செவிடர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—அதே போல் உடல் ஊனமுற்றோருக்கு என்ன வேலை வாய்ப்பு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே கேள்வி, அவர்களுக்கு எப்படிப்பட்ட வேலை வாய்ப்பைத் தருகிறார்கள் என்பது பற்றி. உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை கற்றுத் தருவதைப் பற்றி அல்ல. அவர்கள் எந்தெந்த வேலைகளுக்குத் தகுதி பெற்றிருக்கிறார்களோ, அந்த வேலைகள் தரப் படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, உடல் ஊன முற்ற பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் கூட வேலை யில்லாமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அவர்களுக்கு வேலை வாய்ப்பில் உடனடியாக முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வேலையில்லாதவர்கள் என்ற நிலைமையில் உடல் ஊனமுற்றவர்களும் இருந்து வருகிறார்கள். உடல் ஊனமுற்றதன் காரணமாக, வேலை கிடைக்காத நிலைமையை நாம் தவிர்ப்பதற்குத்தான் முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். முடிந்த அளவு வேலை தரப்பட்டு வருகிறது.

திரு. கே. சௌந்தரராசன் : தலைவரவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு வேலை தருகின்ற நேரத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இத்தனை சதவீதம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று அரசு அளித்துள்ளதே; அதே போல், உடல் ஊனமுற்றோர்களுக்கு இத்தனை சதவீதம் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த யோசனை கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொல்கிற நேரத்தில், இதிலே உள்ள சில கஷ்டங்களை நான் சொல்லியாக வேண்டும். ஒரு பேராசிரியர் பதவிக்குக் கண் தெரியாத ஒருவரை நாம் நியமித்து, அவர்கள் வகுப்புக்குச் செல்லக் கூடிய நேரத்தில், மாணவர்கள் இல்லாத நிலையில் பாடம்

1978 மார்ச் 8]

சொல்லிக் கொடுக்கிற சூழ்நிலைகள் ஏற்பட்டு அதனுல் அந்த மாணவர்கள் பயன்படாத நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இருக்கிற நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் உற்ருேர் மறுவாழ்வுத் திட்டம் என்று திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் கால் ஊனம் உற்றவர்களுக்கு மூன்று கால் சக்கர வண்டிகள் கொடுத்தார்களே, அப்படி எவ்வளவு வண்டிகள் கொடுக்கப்பட்டன. கிராமங்களிலும், நகரங்களிலும் கால், கை ஊனம் உற்றவர்கள் லட்சக்கணக்காக இருக்கிருர்கள். பதிவு செய்துள்ள 9,000 பேர்களில் இப்போது 2,000 பேர்களுக்குத்தான் வேலை அளிப்பதாகச் சொல்கிருர்கள். ஆகவே உடல் ஊனம் உற்று 10 வருடம் படித்து விட்டு, பெண்களும் ஆண்களும் தவித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு எவ்வளவு காலத்திற்குள்ளாக பூரா பேருக்கும் வேலை கொடுக்க அரசு முன் வரும் என்று கேட்க விரும்புகிறேன். அத்தோடு இந்த உடல் ஊனம் உற்ருேர்களுக்கு கிராமத்தில் அவர்களுக்குப் பயன்படும் விதத்தில் சிறுதொழில் வைத்து அவர்களுடைய வாழ்க் கைக்கு உத்தரவாதம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த அருமையான யோசனையை சர்க்கார் கவனத்தில் ஏற்றுக் கொள்கிறது.

சென்னைக்கு குடிநீர் வழங்கல்.

* வினு 452—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது செயல்பட்டுவரும் சென்னை குடிநீர்த் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் பற்றி ஐ.நா. நிபுணர்கள் அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிருர்களா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறைபாடுகள் யாவை ?

(இ) அவைகளை நிவர்த்திக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) (1) பூண்டி மற்றும் புழலேரி ஆகிய நீர்த்தேக்கங் களில் தற்போது 60 சதவீதத்திற்கு மேல் தண்ணீர் ஆவியாவதன் மூலமும், கசிவுகள் மூலமும் வீணுகின்றது.

TRUTH ALONE TRIUMPHS